பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

19 09 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை மேம்படுத்த உலக சுகாதார அமைப்புடன் இணைந்து பணியாற்ற இந்தியா விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான நல்லுறலவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. கல்வி முறையை நவீனமயமாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

4. நாட்டின் கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளின் சில இடங்களில் இன்று மிக கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை மேம்படுத்த உலக சுகாதார அமைப்புடன் இணைந்து பணியாற்ற இந்தியா விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமக்கு வாழ்த்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பின் தலைவர் திரு. டெட்ரோஸ் அதானத்திற்கு நன்றி தெரிவித்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகளிர் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிப்பதிலும் உலக சுகாதார அமைப்புடன் இணைந்து செயல்பட விரும்புவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான நல்லுறலவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு சென்றுள்ள அமைச்சர், அபுதாபியில் நடைபெற்ற இந்திய - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவு தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

விண்வெளி, பாதுகாப்பு, மருந்து, உணவு பதப்படுத்துதல், ஜவுளி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

துபாய் கண்காட்சி மையத்தில் இந்திய வெளிநாட்டு வர்த்தக நிறுவனத்தின் வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த வளாகம் இருநாட்டு மாணவர்களுக்கும் வர்த்தகம் தொடர்பான உயர்தர பயிற்சிகளை வழங்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

கல்வி முறையை நவீனமயமாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

புதிய தேசிய கல்விக்கொள்கை அமலாக்கம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

பின்னர் இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கல்வியை சுமையாக அல்லாமல் ஆர்வத்துடன் மாணவர்கள் கற்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

உலகத் தரத்திலான பள்ளிக் கல்வியை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசு செயல்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தேசிய கல்விக் கொள்கையின் பலன்கள் ஒவ்வொரு மாணவரையும் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அரசு செயல்பட்டு வருவதாக திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுச்சேரியில் சாலைக் கட்டமைப்பு திட்டத்திற்காக 436 கோடி ரூபாயை ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

அங்குள்ள இந்திரா காந்தி சதுக்கத்தை ராஜீவ் காந்தி சதுக்கத்துடன் இணைக்கும் 3 புள்ளி 8 கிலோ மீட்டர் உயர்மட்ட வழித்தடத்திற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இத்திட்டம் தமிழகத்தின் சென்னை, திண்டிவனம், விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் வாகனங்களின் நெரிசலைக் குறைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் புதுச்சேரியில் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதோடு மக்களுக்கு வசதியை அதிகரிக்கும் என்று திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

<<<<>>>>

அடுத்த தலைமுறை சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலமாக வேளாண்துறைக்கு ஏற்படும் பயன்கள் குறித்த கூட்டம் மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

அரசு அறிவித்துள்ள வரி குறைப்பின் பலன்கள் விவசாயிகளை சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் வேளாண் எந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு விதிகள் விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான 2 நாள் உச்சிமாநாடு புதுதில்லியில் நடைபெறவுள்ளதை ஒட்டி அதற்கான அறிமுக நிகழ்ச்சியில் நேற்று அவர் உரையாற்றினார்.

தனிநபர் தரவுப் பாதுகாப்பு தொடர்பான சட்டம் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதாக அவர் கூறினார்.

இணையதள விளையாட்டுகள் தொடர்பான புதிய விதிகள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் 500 தரவு ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

எரிசக்திப் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், புதைபடிம எரிபொருள் சார்பு நிலையை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பசுமை ஹைட்ரஜன், எரிசக்தி துறையில் எதிர்காலத்தில் முக்கிய எரிபொருளாக திகழும் என்று திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

<<<<>>>>

தேசிய விருதுபெற்ற Chalo Jeete Hain குறும்படம் நாடுமுழுவதும் லட்சக்கணக்கான பள்ளிகள் மற்றும் 500 திரையரங்குகளில் நேற்று திரையிடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் மாணவர் பருவ வாழ்க்கையை அடிப்படையாக கொண்டு இந்த குறும்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படம் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும் வகையில் உள்ளது என்று செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்த குறும்படத்தை பார்த்தவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(Sound Byte – பார்வையாளர்கள் - 69 Sec. )*

சேலத்தில் இப்படம் 5 நாட்களுக்கு திரையிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

மருந்துப் பொருட்களுக்கான வரி குறைக்கப்பட்டுள்ளதன் மூலம் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று திருவண்ணாமலையைச் சேர்ந்த மருத்துவர் திரு. ஹரிகோவிந்தன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte - Hari Govindan - 62 Sec)

வேளாண் உபகரணங்களுக்கான வரி குறைப்பு விவசாயத்திற்கு ஊக்கமளிக்கும் என்று திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி பிரபாகரன் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளின் சில இடங்களில் இன்று மிக கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீஹார், மத்தியப்பிரதேசம், உத்தராகண்ட், கோவா, மேற்குவங்கம், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஆந்திரா, கர்நாடகா, ஜார்கண்ட், ஒடிசா மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில இடங்களில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

அபுதாபியில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஜெய்ப்பூர் அணி - பெங்கால் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் புனே அணி - மும்பை அணியை வென்றது.

**<<<<>>>>**

தமிழகத்தின் மாவட்டங்களுக்கு இடையேயான ஜூனியர் தடகளப் போட்டி சென்னை தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இன்று தொடங்குகிறது.

<<<<The End>>>>